**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 2 of 2025 |

Depositions of PW - 4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மயிலாத்தாள்

Father's Name : க/பெ.தேவராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கோவை ஜல்லிப்பட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் பார்த்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த செல்லமுத்து எனது அப்பா மற்றும் ராமத்தாள் எனது அம்மா. தேதி மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை, சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக காலை சுமார் 07.00 மணியளவில் எங்கள் ஊரைச் சார்ந்த பொன்னுசாமி என்பவர் எனது கணவருக்கு போன் செய்து போன் செய்து எனது அப்பா மற்றும் அம்மா இருவருக்கும் விபத்து ஏற்பட்டு செஞ்சேரி புதூர் அருகே உள்ள வடுகபாளையம் பிரிவில் விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் சொன்னதின் அடிப்படையில் நாங்கள் சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது இருவரும் விபத்து ஏற்பட்டு இறந்த நிலையில் இருந்தார்கள். அப்பொழுது நான் அருகில் இருந்தவரிடம் கேட்ட பொழுது டிராவல்ஸ் பேருந்து இருவர் மீதும் வந்து மோதி விபத்து ஏற்படுத்தி விட்டதாக தகவல் சொன்னார்கள். பின்னர்

போலீசார் சம்பவ இடம் வந்து ஆம்புலன்ஸ் மூலமாக எனது அப்பா மற்றும் அம்மா இருவரையும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு நெகமம் காவல் நிலைய ஆய்வாளர் இருவர் பிரேதத்தின் மீதும் பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**